# EMBASSY OF INDIA
# KUWAIT

Helpline established by Embassy of India

**குவைத் இந்திய தூதரகம் ஏற்பாடு செய்துள்ள அவசர உதவி தொடர்பு:**

தற்போது குவைத்தில் நடைமுறையில் உள்ள வெளிநாட்டினருக்கான சோதனை தொடர்பாக இந்திய தூதரகம் குவைத் அதிகாரிகளுடன் தொடர்ந்து பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு வருகிறது. குவைத்தில் வாழும் வெளிநாட்டினரின் இது தொடர்பான கவலைகளையும் அச்சங்களையும் தூதரகம் அவர்களிடம் தெரியப் படுத்தி உள்ளது. அவர்களும் சோதனை மேற்கொள்ளும் அதிகாரிகளுக்கு சோதனை மேற்கொள்ளும்போது எவ்விதமான அடாவடி நடவடிக்கைகளையும் கையாளக் கூடாது என்ற தெளிவான உத்தரவுகளை பிறப்பித்து இருப்பதாக தெளிவு படுத்தி உள்ளனர். மேலும், சோதனை நடவடிக்கையின் போது எவரேனும் பாதிக்கப்பட்டால் கீழ்காணும் விலாசத்தில் தொடர்புகொள்ளும்படி அறிவுறுத்தி உள்ளனர்:

**Operations Department**
**Ministry of Interior, Kuwait**
**Fax: 22435580**
**Tel: 24768146 / 25200334**

அனைத்து இந்திய நாட்டவரும் குவைத் நாட்டின் குடிஉரிமைக்கான சட்ட திட்டங்களையும் போக்குவரத்து விதிகளையும் மதித்து நடக்கும்படி இந்தியத் தூதரகம் வேண்டுகோள் விடுக்கிறது. எப்பொழுதும் அடையாள அட்டை மற்றும் இதர ஆவணங்களைத் தன்னுடன் எடுத்துச் செல்வது பாதுகாப்பானதாக இருக்கும்.

சோதனையின் போது இந்தியப் பிரஜைகள் எவரேனும் ஒருக்கால் வரம்பு மீறலுக்கு ஆளானால் முழு விவரங்களோடு உடனடியாக கீழ்க்காணும் அலைபேசி எண்ணிலும், மின்னஞ்சல் முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம்:

**அலைபேசி எண்** : 67623639
**மின்னஞ்சல்** : consularhelp@indembkwt.org

**இந்தத் தொடர்பு எண்கள் மேற்கண்ட காரணங்களுக்காக மட்டுமே.**

தமிழாக்கம்: குவைத் தமிழ் இஸ்லாமியச் சங்கம்

**குவைத்**
**13.06.2013**